விலை ரூபா 5.00 Registered as a News Paper in Sri Lanka பக்கம் 8

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 2 ஞாயிற்றுக்கிழமை (18-8-2002) தொலைபேசி 3378 ஒலி 241

திருமறைக்கலாமன்றம்
வழங்கும்
ஸ்பார்ட்டக்கஸ்
(நாடகம்)
ஒகஸ்ட் 30, 31:
செப் 1, 2002
(வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்றஅரங்கில் மாலை 6.45 மணி

★ **பேச்சுக்கான ஆயத்தம் மும்முரம்**

## நோர்வேயின் சமாதானக் குழு விரைவில் பிரபாவைச் சந்திக்கும்

(ஒஸ்லோ)

நோர்வேயின் சமாதானக் குழுவினர் வன்னிக்குச் சென்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக ஒஸ்லோத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிகவிரைவில் இடம்பெறவுள்ள இச்சந்திப்பில், சமாதானப் பேச்சுக்களின் போது, புலிகள் தரப்பால் வலியுறுத்தப்படவுள்ள முக்கிய விடயங்கள் குறித்தும், சமாதானப் பேச்சுக்களின் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக தெரியவருகிறது.

(8ஆம் பக்கம்பார்க்க)

## மாவீரர்களின் பெற்றோரை தலைவர் பிரபா சந்திப்பார்

(மட்டக்களப்பு)

தமிழீழ போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் நீத்தமாவீரர்களின் பெற்றோர்களை, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் விரைவில் சந்திக்கவுள்ளார் என்று மட்டு அம்பாறை மாவட்டமுன்மாதிரிக்கோட்ட அரசியல்துறை சிறப்புப் பொறுப்பாளர் சச்சிமாஸ்ரர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மண்டுரில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்துக்காக தம்மை அர்ப்பணித்து களமாடி உயிர் நீத்த மாவீரர்களின் பெற்றோர் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் விபரங்கள் தொகுக்கப்படுவதாகவும் அவர்களை தலைவர் சந்திப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

இச்சந்திப்பு இடம் பெறவுள்ள இடம் காலம் குறித்து தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை

இதேவேளை ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் நடைபெறும் மாவீரர் வாரத்தில் மாவீரர்களின்பெற்றோர்

8 ம் பக்கம்பார்க்க

**இலங்கை சிங்களவருக்கு மட்டும் உரியதல்ல**

# இடைக்கால நிர்வாகசபை புலிகளிடம் ஒப்படைக்கப்படும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(திருமலை நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகசபையை ஏற்றுக்கொள்வதற்கு முன்வந்திருக்கின்றமை இலங்யின் அரசியல் அமைப்பை ஏற்றுக் கொண்டதற்கு சமமாகும்.**

இலங்கையின அரசியல் அமைப்புக்கு அமைவாகவே வடக்கு கிழக்கு பகுதிகளுக்கான இடைக்கால நிர்வாக சபை ஒப்படைக்கப்படும்

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் நேற்று திருகோணமலையில் இடம்பெற்றது

இக் கூட்டத்தில் உரையாற்றும் போதே பிரதமர் விக்கிரமசிங்கமேற்கண்டவாறு குறிப்பிட்டார்,

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையி

8 ம் பக்கம் பார்க்க

அன்புவாசகர்களே,

நாளை வெளிவர வேண்டிய உங்கள்

**சங்குநாதம்**

தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளை மறுதினம் புதன் கிழமை வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம்.

(ஆ-ர்)

## காணாமற் போனவர்கள் சிறைகளில் இல்லை

### தேடும் உறவுகளுக்கு ஏமாற்றம்

(கொழும்பு)

கைதாகி காணாமற் போனோர் சங்கப் பிரதிநிதிகள், அன்னையர்முன்னணி அங்கத்தவர்கள் ஆகியோர் நேற்றையதினம் நீர்கொழும்பு வெலிக்கடை மற்றும் மகசீன் சிறைச்சாலைக்குச் சென்று 1996ம் ஆண்டு காலப்பகுதியில் கைதாகிக் காணாமற் போனோர் எவரும் இருக்கவில்லை. இந்த நிலையில் நாளை திங்கட்கிழமை அவர்கள் அநுராதபுரம் சிறைச் சாலைக்குச் சென்று தமது உறவுகளை தேடிப் பார்க்க

ஏற்றுக் கொண்டதற்கு சமமாகும்.

இலங்கையின அரசியல் அமைப்புக்கு அமைவாகவே வடக்கு கிழக்கு பகுதிகளுக்கான இடைக்கால நிர்வாக சபை ஒப்படைக்கப்படும்

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டம் நேற்று திருகோணமலையில் இடம்பெற்றது

இக் கூட்டத்தில் உரையாற்றும் போதே பிரதமர் விக்கிரமசிங்கமேற்கண்டவாறு குறிப்பிட்டார்,

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையி

8 ம் பக்கம் பார்க்க

(கொழும்பு)

கைதாகி காணாமற் போனோர் சங்கப் பிரதிநிதிகள், அன்னையர்முன்னணி அங்கத்தவர்கள் ஆகியோர் நேற்றையதினம் நீர்கொழும்பு வெலிக்கடை மற்றும் மகசீன் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டனர்.

இச்சிறைச்சாலைகளில் 1996ம் ஆண்டு காலப்பகுதியில் கைதாகிக் காணாமற் போனோர் எவரும் இருக்கவில்லை. இந்த நிலையில் நாளை திங்கட்கிழமை அவர்கள் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று தமது உறவுகளை தேடிப் பார்க்கவுள்ளனர். (த)

# ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் இம்மாத இறுதியில் வன்னி வருவார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இமமாத இறுதிக்குள் வன்னிக்கு வருவாரென எதிர் பார்க்கப்படுகிறது.

தாய்லாந்தில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள பேச்சுக்கள் தொடர்பாக ஆராய வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன்கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சந்தித்து பேசுவார் என்றும்;

விடுதலைப் புலிகளின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும பிராந்தியத் தளபதிகளுடனும் சந்திப்பொன்றை ஏற்படுத்துவாரென்றும் இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து ஊகங்கள் வெளியாகியுள்ளது.

வன்னியில் சில தினங்கள் தங்கியிருக்கும் ஆலோசகர் பாலசிங்கம் தமிழ்க் கூட்டமைப்பு, பாராளுமன்ற உறுப்பினர்கள், புலிகளின் யுத்த

8 ம் பக்கம் பார்க்க


## ஸ்ரீ முருகன் பாமாலை வெளியீடு

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் தேர் உற்சவத்தன்று ஸ்ரீ முருகன் பாமாலை வெளியிடப்படும்.

(கையடக்கப் பதிப்பு)

செயலாளர்

ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்

பருத்தித்துறை

(கி-4860)

## கோலாகலமான திறப்பு விழா

19. 08. 2002 திங்கட்கிழமை நண்பகல் 12.5 - 1.35 வரையுள்ள சுபவேளையில்

வெஸ்டேன் யூனியன் பணம்மாற்றமும், பெடக்ஸ் சேவையும்

Western Union Money Transfer & Fedcx Services

யாழ்ப்பாணத்திலுள்ள உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பணம் அனுப்புவதற்கு - பாதுகாப்பானதும் விரைவானதும் உங்கள் பொருட்களை விரைவாக விமானமூலம் உங்களுக்கு வேண்டிய இடத்திற்கு பாதுகாப்பாக அனுப்ப தொடர்பு கொள்ள வேண்டிய நிறுவனம்

212, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

மகாலட்சுமி ஸ்டோர்ஸ்

தொலைபேசி இல: 021-2024

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

ஆண்டு1இல் இருந்து மேற் படிப்பு வரைசிறந்த ஆசிரியர் கள் வகுப்பில் சிறுதொகை மாணவர்களுடன் ஆங்கிலத் தில் கூடிய கவனம். அனு மதிக்கு தலைமை ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426, (302) காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

(5715)


தவறணையில் தாக்கப்பட்ட சம்பவம்

# ஊர்காவற்றுறையில் அடுத்த வாரம் மறியல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் அங்கத்தவர் கள் கடற்படையினரால் தாக் கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முக மாக அடுத்த வார முற்பகுதி யில் ஊர்காவற்றுறைப் பகுதி யில் மறியற் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இம் மறியற் போராட்டத் திற்கு கூட்டுறவுத்துறைசார் நிறுவனங்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மனித நேய அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோரை ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர் கள் கோரியுள்ளனர். (த)

பொ. ஐ. மு. உடன் ம. வி. மு.

# கூட்டுச் சேர்வது சமாதான முயற்சிக்கு கேட்டை உருவாக்கும்

## அமைச்சர் ஹக்கீம் கண்டனம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன் னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் கூட்டுச் சேர்வ தன் மூலம் ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் முன் னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளின் இஸ் திர நிலையை குலைக்க முயல் கிறார்கள் என ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நடை பெற்ற ஐக்கிய தேசிய முன் னணியின தேசிய நிறைவேற் றுக் குழுக் கூட்டத்தில் உரை யாற்றும் போதே ஹக்கீம் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது;

இவ்வாறான ஜனாதிபதியின் சூசகமான முயற்சிகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் இடமளியாது என்றார்.

மேலும் கூறுகையில் நாட் டின் அனைத்து இன மக்களும் அமைதியான முறையில் வாழ்க்கையை நடத்திச் செல் வதற்கான வழிகளை ரணில் அரசு நாடிச் செல்கிறது

பொதுஜன ஐக்கிய முன் னணியோ முஸ்லிம் மக்களின் உணர்வுகளை தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்து வருகிறது என்று குற்றசாட்டினார்.

(உ-8)

# கடற்படையினரின் தாக்குதலுக்கு அரசியல்துறை கண்டனம்

(கொழும்பு)

ஊர்காவற்றுறை தெங்கு பனம்பொருள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நாரந் தனைக்கிளை முகாமையாள ரும், ஏனைய 7 பேரும் கடற் படையினரால் மூர்க்கத்தன மாக தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுத லைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறையினர் தமது கடும் கண்டனத்தை தெரி வித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ்ப் பாணம் யுத்தநிறுத்த கண் காணிப்பு குழுவுக்கு கண் டன அறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர். அக் கண்டன அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது சமா தானச்சூழல் கனிந்து வரும் இவ்வேளையில் கடற்படையி னர் தமது அடாவடித்தனங் களைத் தொடர்ந்து வருவது பொதுமக்கள் மத்தியில் ஒருவித சந்தேகத் தையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. இச் சம்ப வத்தில் வயோதிபர் ஒருவரை சற்றேனும் இரக்கமில்லாது கிணற்றுக்குள் தூக்கிப்போட் டுள்ளனர் இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்

அதேவேளை கடற்படையினர் இவ்வாறான நடவடிக்கை களில் ஈடுபடுவது புரிந்துணர்வு உடன்படிக்கையையே கேள விக்குள்ளாக்கும் ஒருசெயற் பாடாகும் கடற்படையினரின் இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக தடுத்து நிறுத் தப் படுவதுடன் அவைமேலும் தொடராத வகையில் சம்பந் தப்பட்ட கடற் படையினரை இனங் கண்டு பகிரங்கத் தண் டனை வழங்கப்பட வேண்டும் என்றும் அக்கண்டன அறிக் கையில் கேட்கப்பட்டுள்ளது.

(த)

## விசேட பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து மயான அபிவிருத்திச்சபையை புனர மைப்பதற்கான விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி ப 3. 00 மணிக்கு கொக்குவில் நூலக கேட் போர்கூடத்தில் நடை பெற வுள்ளது.

(உ-3)


## விஞ்ஞான பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிவித்தல

விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு
(இரண்டாம் அரையரண்டு)
2002

19-08 2002 நடை பெறுமென அறிவிக்கப் பட்டிருந்த கணனி விஞ் ஞான பாட அலகுகள மீதான தேர்வுகள் கீழ் சண்ட திகதி ளுக்குமாற் றப்பட்டுள்ளன.

- GSG 103 & CSG 13
  அலகுகள
  20-08-2002 பி. ப.
  2-00 – 4-00
- CSG 104 & CSG 14
  அலகுகள
  24-08-2002 பி. ப.
  2-00 – 4 00

பதிவாளர்.

(C-4862)


# கடற்படையினரின் தாக்குதல் குறித்து பிரதமருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் நாரந் தனை கிழக்கு 103 ம் இலக்க கிளை விற்பனைநிலையத்தில் கிளை முகாமையாளர் உற் பத்தியை வழங்கவந்த அங்கத் தவர்கள் மற்றும் பாவனை யாளரை கடற்படையினர் தாக்கிய சம்பவம் கண்டனத் துக்குரியது.

இவ்வாறு வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட் டுறவுச் சங்கங்களின் சமாசம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

நாரந்தனை கிழக்கு 103 ம் இலக்க சங்க கிளை விற்பனை நிலையத்தில் கடந்த 16 ந் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு சிவில் உடையில் சென்ற நாரந்தனை புளியங்கூடல் கடற்படை முகாமைச் சேர்ந்த ஆறு கடற்படை யினர் அங்கிருந்தவர்கைள கடுமையாகத் தாக்கியுள்ள னர் உடைமைகளைச் சேதப் படுத்தியுள்ளனர். பணத்தை யும் சூறையாடி காடைத்த னம் புரிந்துள்ளனர் என்பதை மனவேதனையுடன் தெரியப் படுத்துகிறோம்.

இச் சம்பவத்திற்கு நீதி கிடைக்கும் வகையில் விசா ரணை மேற்கொண்டு இது போன்ற சம்பவங்கள் தொட ராமல் இருக்கசம்பந்தப்பட்ட படையினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை இத்தகைய அரச படைகளின் அராஜகம் தொடருமானால் மக்கள் போராட்டத்தை மேற் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுமென்றும் அக் கடிதத் தில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

(இ)

# நல்லூரான் திருவடிக்கு - 6



## வந்தெமக் கருளுவாயே!

சீரோங்கு மாழிசூ ழகிலமெங் கும்புகழ்கொள்
திருமருவு மீழ நாட்டின்
சீராக நீர்வளம் நிலவளஞ் செறியவுள
திகழும் யாழ்ப்பாண நகரில்
பேரோங்கும் யமுனையொடு பெருகுநடவாவிகள்
பேறுதருஞ் சிவத லங்கள்
பேரறிவை யூட்டிடும் பெருங்கலைக் கழகங்கள்
பெரியவுயர் தெங்கு கமுகு
ஏரோங்கு நற்கழனி யெழிலோங்கு மாமனைகள்
எண்ணற்ற பெரிய பனைகள்
ஏதமில் சங்கிலியன் தோப்போடு பலமரம்
என்றுமெழி லுண்டு பண்ணும்
வாரோங்கு நல்லையில் வள்ளிதெய் வானையொடு
வாழ்வு கொள் கந்த வேளே!
வடிவேல் கரங்கொண்டு வண்ணமயில்மீதே
வந்தெமக் கருளு வாயே!

'சமூக ரெத்தினம்' எம்.கே. இளையப்பு ஜே. பி.

## அற்புதங்கள் பூண்ட தலம்

நல்லூர் கதிர்காமம் சந்நிதிமா விட்டபுரம்
எல்லாமே ஈழத் திருந்தலங்காண் - நல்லூரே
ஆண்ட தமிழர் பரம்பரையின் அற்புதங்கள்
பூண்டதல மென்பார் புகழ்ந்து

- இறை மணி

## அருள் தருவாய் கந்தா!

நல்லை - - நல்லை
நாம் நலம்காண
நல்கும் நல்லோன் உறையும்
நல்லிடம்!
முருகென்னும் சொல்லுக்கு
முடிவாய் அமைந்தவனே!
மானிடர்கள் பகைகொண்டு,
மிருகமாக வளரும் நிலை,
முடிவாக . . !

அருளிட வேண்டும் - இந்நாடு
அமைதி பெற!
வல்லோனே!
வடிவழகு வெற்றி வேலனே!
வலம் வரும் நீ,
வரம் தரவேண்டும்,
வளநாடு வளம்பெற!

R. ஸ்வஸ்திகா, யாழ்ப்பாணம்

## நல்லையிலே இருக்கின்றார் ஓடிப் போடா

வில்லையடி வீற்றிருந்த யோகஞானி
சொல்லும் சொல் வேதம் போல் எம்மைத் தூண்டும்
இல்லைப் போ உனக்கொன்றும் எழுந்து போடா உன்
தொல்லை போம் சூர் துளைத்தான் உன் துயர்
களைவான்
நல்லையிலே இருக்கின்றார் ஓடிப் போடா இனி என்
எல்லையிலே உனக்கிங்கு வேலையில்லை
நல்லபடி அவன் புராணம் ஓது என்றார் உன்
நாவினிக்கப் பண்ணோடு பாடு என்றார் இதை
சொல்வதிலே அவர் தொனியில் உறுதி கண்டேன்
சொன்னபடி நாயடியேன் தொழுப்பளுளேன்

நயினை திருமுருகமாமணி

## தொடர்கிற வேண்டுதல்

வாடிநின்ற பயிர்கள் நாம் நீரை வார்க்க
வந்திடுக மழைமுகிலே! போரின் காலால்
கூடிடிந்த குருவிகள் நாம் . . . கூடு கட்டிக்
குடிபூர வைத்திடுக ''காக'' நட்பே
தாடியென வளர்ந்தது காண் சோகம்; கத்தி
தந்ததனை மழித்திடுவாய் அயலின் கையே!
பாடலிழந்திட்டன எம் வாய்கள்; தூண்டிப்
பாடவைக்கப் பண்ணிசைப்பாய் அமைதிக் காற்றே!

காயங்களில் இரத்த கங்கை காயவேண்டும்
கரந்துறையும் முழுவலியும் மாயவேண்டும்
தேக ஊற்றில் புதுத்தெம்பு ஊறவேண்டும்
தினவெடுத்து 'வெற்றியூழி' ஆட வேண்டும்
மாயமலை நொருங்கிற்று; மயக்கம் போக்க
மந்திரவேல் வரவேண்டும். நிமிர்ந்தித் திக்கின்
நாயகர் நாம் என நாங்கள் நடக்க வேண்டும்
நல்லூரா ''நம்பிக்கை'' நிலைக்க வேண்டும்

த. ஜெயசீலன்

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பலாபலனாக நாட்டின் தேசிய வருமானம்

# படிப்படியாக உயர்ந்து வருகிறது

### திருமலையில் பிரதமர் உரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் அரசாங்கத்தினாலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து, நாட்டின் தேசிய வருமானம் படிப்படியாக உயர்ந்து வருகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் மாலை திருகோணமலை பெரிய முற்றவெளி மைதானத்தில் 'யுகதக்ம' வர்த்தகக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்து பேசும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்; விவசாயம் மீன்பிடி மற்றும் கைத்தொழில் ஆகிய துறைகளிலும் துரித வளர்ச்சி காண்பதன் மூலமே தேசிய பொருளாதாரத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்யமுடியும்.

இதற்கு அமைவாகவே மாவட்டங்கள் தோறும் வர்த்தக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய வர்த்தகக் கண்காட்சிகளை நடத்துவதன் மூலம் கைத் தொழில் துறையில் மறுமலர்ச்சியினை ஏற்படுத்த முடியும் என்றார்.

மேலும் பேசுகையில்; ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியேற்ற போது நாட்டின் பொருளாதாரம் வலுவிழந்து இருந்தது.

ஆனாலும், தற்போது தமது அரசாங்கம் மேற்கொண்டுவரும் பொறுப்பான முயற்சிகளைத் தொடர்ந்து இவ் வருடம் பொருளாதாரம் 3 சதவீதத்தால் உயரும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய கண்காட்சிகள், முதலீட்டாளர்களுக்கு புதிய கைத் தொழில்களை ஆரம்பிக்க உதவியாக இருக்கும் என்றார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ரோகித போகல்லாகம ஆகியோரும் மற்றும் பல அரசியல் பிரமுகர்களும் உரையாற்றினர். (உ-8)

## பதவிக்காலம் முடிகிறது

(யாழ்ப்பாணம்)

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜாவின் பதவிக் காலம் ஒக்ரோபர் 12 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. (உ-19)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. (உ-3)

## ஆங்கில ஆரம்பக்கல்வி கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஆங்கில ஆரம்பக்கல்வி கண்காட்சியும், கருத்தரங்கும் எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் கண்டியில் இடம் பெறவுள்ளது.

யாழ். குடாநாட்டில் இருந்து கோட்டக்கல்வி அதிகாரிகள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-19)

### சமாதானப் பயணத்தின் சாதக முடிவுகளுடன்

# நோர்வேப் பயணத்தை முடித்து அமைச்சர் மிலிந்த நாடு திரும்பினார்

(கொழும்பு)

நோர்வேக்கான பயணத்தை முடித்துக் கொண்டு பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞானத் தொழில் நுட்ப அமைச்சர் மிலிந்தமொறகொட நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்இடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதான பேச்சு வார்த்தைக்கான திகதியினை நிர்ணயிப்பதற்காக கடந்த 13 ஆம் திகதி அமைச்சர் ஒஸ்லோ பயணமானார்.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் அமைச்சருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையில் கடந்த புதனன்று பேச்சு வார்த்தை நடைபெற்றது.

இதனடிப்படையில் இரு தசாப்தங்களாக இடம்பெற்று வந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் பேச்சுவார்த்தைகள் அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் நடத்துவதென முடிவு எடுக்கப்பட்டது

ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதென்ற இலக்கினை அடைவதற்கான முன் முயற்சிகளினை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு மிலிந்த நாடு திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பிறந்த..

நெருப்பும் இரும்பும் சம்பந்தமான தொழில், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஏற்றுமதி செய்கின்ற தொழில் போன்றவை சிறப்பாக இருக்கும். பொதுவாக இவர்களுக்குப் பெயர் பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக அமைந்து விட்டால் தொழில்கள் மூலம் பெரும் செல்வம் சேர்ப்பர்;

### நோய்

இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான நோய்களும், உடலுறவு சம்பந்தமானநோய்களும் மூட்டுவலி சம்பந்தமான நோய்களும் வர வாய்ப்பிருப்பதால், சிற்றின்ப விஷயங்களில் மிதமாகஇருப்பதுநலம்.

### பெயர் அமைக்கும் முறை

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு சூரியன், புதன் போன்ற ஆதிக்கம் உள்ள எண்களில் பெயரை அமைப்பது சிறப்பாகும். சூரிய ஆதிக்கமான 19,37,46,64,82, புதன் ஆதிக்கமான 14,23, 32,41,59,77 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்வது சிறப்பாகும், இவர்கள் செய்கின்ற தொழிலுக்கும் மேற்குறிப்பிட்ட எண்களில் பெயரை அமைத்துக் கொண்டால் நன்மையே.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்- 1-5-6

யோகமான தேதிகள்- 1,10, 19,28,5,14,23,6,15,24

யோகமான நிறம்- மஞ்சள், வெளிர் நீலம், சாம்பல்நிறம்

யோகமான மோதிரக்கல்- மாணிக்கம், வைரம், கனக புஷ்பராகம்

ஆகாதநிறம்-கறுப்பு, கோப்பி கலர்.

ஆகாத தேதிகள்- 8,17,26

### உடல் எண்-1, உயிர் எண்- 6

1,10,19,28 போன்றதேதிகளில் பிறந்து தேதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வந்தால், சூரியன், சுக்கிரன், போன்றஆதிக்கத்தில் பிறந்தவராவார், சூரியன் இவர்களுக்கு நேர்மை, நல்ல பெயர், நல்ல நண்பர்களைச் சேர்க்கும். இந்த உலகத்தில் பிறந்தநாம் எல்லாசுக போக பாக்கியங்களையும் அனுபவிக்க வேண்டும் என்று சுக்கிரன் இழுத்துச் செல்லும் நல்ல அழகுடனும், கவர்ச்சியானநடைஉடைபாவனையுடனும் காட்சியளிக்கும் இவர்களில்பலர் வசதிஉள்ளவர்களே. இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு இருக்கும் மிடுக்கான தோற்றமும் பேச்சாற்றலும் மற்றைய எண்காரர்களுக்கு இருக்காது.

எவ்வளவு சுகமாக வாழ வேண்டுமோ அவ்வளவு சுக வாழ்க்கையையும் அடைவர். பெயர் குரு ஆதிக்கமாகிய 3 எண்களிலிருந்தால், பெண்களாலோ குழந்தைகளாலோ மனக்கவலை உண்டாகும், பெயர் பொருத்தமானதாக அமைந்திருந்தால் எந்தக் குறையும் இருக்காது, வாகனப் பிரியரான இவர்கள் தான் பயன்படுத்தும் வாகனங்களை அழகு படுத்திவைத்திருப்பார்கள். வாசனைத் திரவியங்கள் மோகமும் இயற்கைக் காட்சிகளை ரசிக்கும் ரசனையும், தூரதேசப் பயணங்களும் இவர்கள் மனதிற்குப் பிடித்தவையே, எப்பொழுதும் தூய்மையாகக் காட்சியளிக்கும் இவர்கள் அலட்டிக் கொள்ளமாட்டார்கள்.

### ஆடம்பரப் பிரியர்

அதிகம் சிரமப்படாமல் சம்பாதிப்பர். எந்த மொழியில் பேசினாலும் அழகாகவும், சுத்தமாகவும், சுருக்கமாகவும் பேசுவர். இவர்களில் சிலர் உயர்ந்த உத்தியோகத்திலும் சிலர் சிறிய உத்தியோகத்திலும் இருக்கின்றனர்; சிலர் மனைவியின் பெயரில் தொழில் ஆரம்பிப்பர். ஆடம்பரப்பிரியரான இவர்கள் பகட்டு சம்பந்தமான தொழில் செய்வர். நகைகள், மின்சாரம் சம்பந்தமான பொருட்கள் வாகனம் இன்னும் பல விதமான பொருட்கள் மூலம் முன்னேற்றம் பெறுவர். எந்த ஆடையை அணிந்தாலும் கவர்ச்சியாகத் தோற்றம் அளிக்கும் இவர்கள் காதல் விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது. அப்படிக் கவனக் குறைவாக இருந்தால் வீண் கெட்ட பெயர் ஏற்படும். பொதுவாக இவர்களுக்கு சூரியன் ஆதிக்கத்தில் உள்ள நல்ல எண்களில் பெயரை அமைத்துக் கொண்டால் கெட்டவை விலகிச் செல்லும், ஆரம்பத்தில் நன்றாகப் பெயர் அமைந்தவர்களுக்குப் பெண்களால் வரவும், பெண்களினால் உயர்வும் உண்டாகும்.

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்து விட்டால், வெளிநாட்டுப் பயணம், உல்லாச சுற்றுப் பயணங்கள், சுகமான வாழ்க்கை, பெரிய வீடு, வாகன வசதி போன்றவைகள் அமையும்.

இவர்கள்எல்லோரிடமும்பழக்கம் வைத்துக்கொள்ள மாட்டார்கள், குறிப்பிட்ட நல்ல நண்பர்கள் வைத்திருப்பார்கள், தனக்கு வருமானம் இல்லாத எந்தக் காரியத்திலும் இறங்க மாட்டார்கள். இவர்கள் சில நேரங்களில் மிடுக்கான குரலோடு பேசிக் கடுமையாகநடந்துகொள்ளுவர். ஏன் இவ்வாறு நடந்து கொண்டோமென்று தனிமையில் வருந்துவர்.

### அனுபவிக்கப் பிறந்தவர்கள்

வயது கூடினாலும் இவர்களது கவர்ச்சி குறையாது. சந்தோஷமாகவும், உல்லாசமாகவும் வாழ ஆசைப்படுவர். வயதாகி கண்ணாடி அணியும் போது கூட அழகான பிரேம் தான் அணிவர் வீட்டிற்குப் பெயின்ற் அடித்து தூய்மையாக வைத்துக கொள்வர். பலவிதமான ஆசனங்களையும் ஆடம்பரப் பொருட்களையும் வைத்துவீட்டைஅலங்கரிப்பர் பழைய வாகனங்களை வாங்கிச் செலவு செய்து கவர்ச்சியானதாக மாற்றி விடுவர். மலைப் பிரதேசங்களுக்குச் செல்வதென்றால்மிக்கமகிழ்சியடைவர். உயர்ந்த நிலையில் இருந்தும் கூட உணர்ச்சி வசப்பட்டு தகுதிக்குறைவான பெண்களுடன் பழகி பின் வேதனை அடைகின்றனர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் இவ்வாறு நடப்பதில்லை. பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்கள இவ்வுலகில் அனுபவக்கப் பிறந்தவர்களாவர். அப்படி இவர்களுக்குச் சிக்கல்கள் இருக்குமேயானால் பெயரைக் குறிப்பிட்ட படி மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

### தொழில்

கண்ட்ராக்ட், ஆடம்பரப் பொருள் சம்பந்தமான தொழில், இரும்பும் நெருப்பும் சம்பந்தமானதொழில்கள் ஆபரணம் சம்பந்தமான தொழில் போன்றவை இவர்களுக்கு நன்மை பயக்கும். பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாகத் தொழிலின் பெயரை அமைத்துக் கொண்டால் சிறப்பாக இருக்கும்.

### நோய்

பொதுவாக இந்தஎண்ணிக்கைக்காரர்களுக்கு இரத்தக் கொதிப்பு, உடலுறவு சம்பந்தமான நோய், நீர்சம்பந்தப்பட்ட வியாதிகள் வரலாம்

ஆனால் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாகப் பெயரமைத்துக் கொண்டால் நோய்கள் அதிகம் வருவதில்லை.

### பெயர் அமைக்கும் முறை

இந்த எண்ணின் ஆதிக்கத்தில பிறந்தவர்களுக்கு சூரியன் ஆதிக்கமான 19, 37, 46, 64, 82 போன்ற எண்களிலும் சுக்கிர ஆதிக்கமான 15, 33, 42, 60, 69 போன்ற எண்களிலும் பெயரையும், வியாபார விலாசங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

### பின் பற்ற வேண்டியவை

யோகமான எண் - 1, 6

யோகமான தேதிகள்- 1, 10, 19, 28, 6, 15, 24, 9, 18, 27.

யோகமான மோதிரக்கல்- கனகபுஷ்பராகம், மாணிக்கம், மரகதம்

யோகமான நிறம் -மஞ்சள், வெளிர் நீலம் பச்சை

ஆகாத தேதிகள் - 3, 12, 21, 30; 8, 17, 26

ஆகாத நிறம் - கறுப்பு ஒறேஞ்சு, கத்தரிப் பூ நிறம்;

(தொடரும்)

## வத்திக்கான் பிரதிநிதி மீனவ பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு வத்திக்கானில் இருந்து வருகைதந்துள்ள ஆயர்மேதகுமல் கொம் ரஞ்சித், கியூடெக் பணிப்பாளர்சி.ஜி.ஜெயக்குமாரின் ஏற்பாட்டில் நேற்றுமுன் தினம் வடமாகாணக்கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப்பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடினார்.

மீனவர்கள் தங்கு தடையின்றி தொழில் செய்வது மற்றும் பொது மக்களின் குடியிருப்புகளில் இருந்துபடையினரை அகற்றுவது ஆகியன குறித்து படைஉயரதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக உறுதியளித்ததுடன்,

நலிவுற்ற மக்களை இனம் கண்டு அவர்களுக்குஅன்பளிப்புக்களை வழங்கவுள்ளதாகவும் இக் கலந்துரையாடலில் ஆயர் குறிப்பிட்டார். (உ-)6

## சொகுசு வாகனங்களின் இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் கையளிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆடம்பர வாகனம் வழங்கப்படவுள்ளது.

பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களுக்கும் வழங்கப்படவுள்ள இவ் வாகனங்கள் இந்தியாவிலிருந்து இலகு கடன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

50 கோடி பெறுமதியான இந்த வாகனங்களின் இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வரினால் சகல பாராளுமன்ற உறுப்பினர்களிடமும்கையளிக்கப்பட்டுள்ளன;

பொதுஜனஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தின் போது அமைச்சர்களின் சொகுசு வாகனங்கள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதனாலேயே, அமைச்சர் இதற்கான அனுமதிப்பத்திரங்களை முன் கூட்டியே உறுப்பினர்களிடம் வழங்கியிருப்பதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-8)

## பெண்கள் விடுதியில் ரகளை

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பெண்கள் விடுதியில் மது போதையில் ரகளை புரிந்த நபர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் கடந்த புதனன்று இடம்பெற்றுள்ளது. (உ-23)

# குடாநாட்டில் 105 நலன்புரி நிலையங்களில் 9226 பேர் தொடர்ந்தும் தங்கியிருப்பு!

## மீளக் குடியமர்த்த அரசிடம் திட்டம் எதுவும் இல்லை

(தென்மராட்சி)

**யாழ்ப்பாண மாவட்டத்தில்உள்ள 8 பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கி வரும் 105 இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில்மொத்தம் மாக 2 ஆயிரத்து 233 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 226 பேர் இன்னமும் தங்கியுள்ளனர் என அண்மையில் மனிதநேய அமைப்புகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.**

தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், கோப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் நல்லூர் பிரதேச செயலக பிரிவுகளில் இயங்கிவரும் 50 நலன்புரி நிலையங்களில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம் பெயர்ந்த ஆயிரத்து. 691 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 872 பேர் தங்கியிருக்கின்றனர்.

அதேவேளை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய். கோப்பாய், பருத்தித்துறை கரவெட்டி, நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் இயங்கிவரும் 55 நலன்புரி நிலையங்களில் 2000 ஆம் ஆண்டில் இடம் பெயர்ந்த 562 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்தி 354 பேர் தங்கியுள்ளனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் 5 நலன்புரி நிலையங்களும், உடுவிலில் 14 நிலையங்களும். சங்கானையில் 16 நிலையங்களும், சண்டிலிப்பாயில் 16 நிலையங்களும், கோப்பாயில் 7 நிலையங்களும், பருத்தித்துறையில் 29 நிலையங்களும், கரவெட்டியில் 15 நிலையங்களும் நல்லூரில் 3 நிலையங்களுமாக மொத்தம் 105 நிலையங்கள் இன்னமும் இயங்கி வருகின்றன. இந் நலன்புரி நிலையங்களில் இன்னமும் இருந்து வருகின்ற இடம் பெயர்ந்த குடும்பங்களின் மீள் குடியமர்வு பற்றி எத்தகைய திட்டங்களும் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

அத்துடன், இக் குடும்பங்களுக்கான உதவித் திட்டங்கள பற்றியும் எந்தவிதமான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் அவ் ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே வேளை, அரசு- புலிகள் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இயல்பு நிலை தோற்றுவிக்கப் பட்டுள்ள போதிலும், வலிவடக்கு மற்றும் தென்மராட்சியில் சிலபகுதிகள் உயர் பாதுகாப்பு வலயமென அரசினால் பிரகடனப்படுத்தப் பட்டிருப்பதும்,

அங்கு மக்கள் மீளக் குடியமரும் உரிமை மறுக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

(உ-77)

## மேற்காசிய பசுபிக் கட்டடக் கலைஞர்களின் வருடாந்தக் கூட்டம்

(கொழும்பு)

மேற்காசிய பசுபிக் கட்டடக் கலைஞர்களின் சம்மேளனத்தின் 32 வது சர்வதேச வருடாந்தக் கூட்டம் நாளை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது

எதிர்வரும் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இக் கூட்டத்தொடரில் மின்சக்தி எரிபொருள் அமைச்சர் கரு ஜெயசூரிய பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இதில்கலந்து கொள்ளவென ஆசிய பசுபிக் பிராந்தியத்திலிருந்து 15 நாடுகளைச் சேர்ந்த 250 பிரதிநிதிகள் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, இன்று தொடக்கம் 20-ம் திகதி வரை கொன்ஸ்ரக்ட் 2002 கண்காட்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## சைக்கிள் களவு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர மத்தியில் நிறுத்தப்பட்டிருந்த ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டி ஒன்று களவாடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்தச் சம்பவம் குறித்து, சைக்கிளைப் பறிகொடுத்தவரான உடுவிலைச் சேர்ந்த அ. லக்ஸ்மன் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

(உ-19)

## தீ மிதிப்பு

(ஆனைக்கோட்டை)

வேலணை கிழக்கு பெரிய குளம் முத்துமாரி அம்மன் ஆலய 8 ஆம் திருவிழாவான நாளை இரவு 9 மணிக்கு மரபு வழிப்படி தீ மிதிப்பு வைபவம் இடம்பெறவுள்ளது.

(உ-201)

## திரைப்பட வழங்குநர் கூ. ச- தலைமை அலுவலக திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத் திறப்பு விழா நாளை காலை 10.00 மணிக்கு இல· 249' பலாலி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து திரைப்பட விநியோகஸ்தர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு மேற்படி சங்கத்தின் தலைவர் ஜீவராஜா கேட்டுள்ளார்.

(உ-3)

## சுதந்திரமாக கடலில் நடமாடத் தடை!

# யாழ். குடாநாட்டில் வசிக்கும் 70சதவீதமான மீனவர்கள் தமது தொழிலுக்குச் செல்வதில்லை

(தென்மராட்சி)

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்துள்ள போதிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள அனைத்து மீனவர்களும், சுதந்திரமாகத் தமது தொழிலைச் செய்து வருமான மீட்டக்கூடிய நிலை இன்னமும் ஏற்படாமையினால் மொத்த மீனவர்களுள் சுமார் 70 சதவீதமானவர்கள் எத்தகைய தொழிலும் செய்யாமல் வீணாகத் தமது வாழ் நாட்களைக் கழித்து வருகின்றனர்.

மீனவர்களால் யுத்த கால நிலையின் போது இழக்கப்பட்ட மீன் பிடித் தொழிலுக்கான உபகரணங்கள் மற்றும் வள்ள வசதிகள் ஈடுசெய்யப்படாத நிலையிலேயே சிலர் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளனர்.

அத்துடன் மீனவர்களுக்குரிய மீனவ அடையாள அட்டைகளை கடற்றொழில் விரிவாக்க அமைச்சு பூரணமாக இன்னமும் வழங்காமையினாலும் மீனவர் தமது மீன் பிடித் தொழிலுக்குச் செல்லாமை மற்றொரு காரணமாகக் கருதப்படுகின்றது.

மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்கின்ற ஆயிரக்கணக்கான மீனவ குடும்பங்கள் தமது ஜீவனோபாயத்துக்கும் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

(உ-77

### உண்மைப்

தொண்டு செய்தால் தானே அந்தச் சமயத்தில் நீங்கள் எனக்கு உதவிசெய்வீர்கள்' என்றன்.

அந்தஎளிய மனிதனுடைய அன்பும் பண்பும்எல்லோரையும் ஆச்சரியப்படவைத்த தாம்,பக்தியென்றால்அதுஇப்படிஇருக்கவேண்டும், சும்மா பட்டையைப் போட்டுக் கொண்டுகாவியைக் சட்டிக் கொண்டால் பக்தி வந்து விடுமா?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கதிர்காம யாத்திரை சென்ற வேளை

# பாணந்துறையில் பஸ் விபத்து

# 11 பேர் ஸ்தலத்தில் உயிரிழப்பு

(கொழும்பு)

பாணந்துறையில் நேற்று நடந்த வாகன விபத்தின் போது 11 யாத்திரிகர்கள் அவ் விடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், 15 பேர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

மின்னேரியாவிலிருந்து கதிர்காமம் நோக்கி யாத்திரிகர்களைஏற்றிச் சென்றதனியார் பஸ்வண்டியொன்றும், எல்பிட்டியாவிலிருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டியொன்றும், மோதியதாலேயே, இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் அனைவரும் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 3 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாணந்துறை பகுதியில் சென்று கொண்டிருந்த ரைக்டர் ஒன்றைமுந்திக் கொண்டு செல்ல முற்பட்ட போதே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் விபத்துக்கு காரணமாகவுள்ள சாரதிகளில் ஒருவரை பொலிஸார் கைதுசெய்திருப்பதாகவும், மற்றொருவர்வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(உ-8)

## சிவாஜி கணேசன் ஞாபகார்த்த விழா

(மானிப்பாய்)

சிவாஜி கலைக்கழகம் நடத்தும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஞாபகார்த்த விழா எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை ஆனைக் கோட்டை யூனியன் மைதானத்தில் கலைக்கழகத்தின் தலைவர் வ. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அரச அதிபர் கே. சண்முகநாதனும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட நீதிபதி இ த விக்னராஜாவும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா வேதநாயகன் மற்றும் வலி- தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ. அன்ரன்ஜோன்சன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ-232)

## இலங்கை-சீனா இடையே வர்த்தக உடன்படிக்கை கொள்கையளவில் இணக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கும சீனாவிற்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

இலங்கை வந்துள்ள சீன வர்த்தக குழுவிற்கும் அமைச்சர் ரவிகருணாநாயக்கா விற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகளின் போதுஇவ் உடன்படிக்கைக்கு கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டது.

(உ-3)

## வைத்தியசாலை செல்லும் வீதி சீரில்லை

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை வீதி நீண்ட காலமாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதனால் அப்பகுதி ஊடாகப் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமம் எதிர்நோக்கப்படுகிறது

(உ-23)

## பாலாவோடை பாடசாலையை மீள இயக்குக

(கொக்குவில்)

1991 ஆம் ஆண்டு இடம் பெற்றஇராணுவநடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தற்போது களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் பாடசாலைக் கட்டடத்தில் இயங்கி வரும் பாலாவோடை பாடசாலையை சொந்த இடத்தில் இயக்க ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இடம்பெயர்ந்த பாலாவோடைப் பகுதி மக்களில் பெரும்பான்மையானவர்கள் தற்போது மீளக் குடியமர்ந்துள்ள நிலையில் இப் பாடசாலை இயங்காமையால் பாலாவோடைமாணவர்கள்2 மைல்களுக்கு அப்பால்உள்ள களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் பாடசாலைக்கு சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது

(உ-243)

# இன்று ஒரு தகவல்

## உண்மைப் பக்தி வேண்டும்

இராமர், இலட்சுமணர், விசுவாமித்திரர்மூன்று பேரும் ஒரு இடத்தில் வந்து கொண்டிருக்கிறார்கள். ஜனகருடைய அழைப்புக்கு இணங்கி மிதிலாபுரிக்குப் பக்கத்தில் அவர்கள் வந்துகொண்டிருக்கும் வழியில் குறுக்கே ஒரு நதி. அந்த நதியைத் தாண்டி அடுத்த கரைக்கு அவர்கள் போக வேண்டும். என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் சுறுப்பான ஒரு ஆள் அவர்கள் முன் வந்து நின்றான். ''யாரப்பா நீ?'' என்று விசாரித்தார்கள். ''நான் ஒரு மீனவன் இந்த நதியில் ஓடம்விட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றான். மிகவும் நல்லதாய்ப் போனது. ஓடம் தயாராக இருக்கிறதா? என்றுகேட்டார்கள்.

''தயாராக இருக்கிறது'' என்றான், ''அதில் எவ்வளவு பேர் ஏறலாம்?'' என்றார்கள். அறுபதுபேர் ஏறலாம் என்றான். ''நாங்கள் மூன்று பேர் தான் இருக்கிறோம்'' என்றார்கள். ''நீங்கள் மூன்று பேரும் மும் மூர்த்திகளுக்குச் சமமானவர்கள். உங்கள் மூன்று பேருக்காக மட்டுமே ஓடத்தைச் செலுத்துவேன். மற்றவர்களுக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை'' என்றான். ''இருந்தாலும் அறுபது பேருக்குரிய கட்டணத்தை நாங்கள் கொடுத்து விடுகிறோம்'' என்றார்கள் ''காசைவிட உங்கள் ஆசி தான் எனக்குப் பெரிது'' என்றான் இவன். விசுவாமித்திரர் முதலில் ஏறினார். அடுத்த படியாக இராமர் அந்த ஓடத்தில் ஏற முயற்சி பண்ணினார். ஆனால் அதற்குள்ளே, திடீரென்று அந்த ஓடக்காரன் ''காலை ஓடத்தில் வைக்காதே'' என்று கத்தினான். அவர்கள் திகைத்துப்போய் விட்டார்கள். ஒன்றும் புரியவில்லை. இலட்சுமணருக்குப் பயங்கரமாகக் கோபம் வந்து விட்டது.

''என்ன இது. இவன் மூன்று பேரும் மும் மூர்த்திகள் என்றான். இப்போது இப்படிக் கத்து கிறான். சக்கரவர்த்தித் திருமகனைப் பார்த்தே இப்படிச் சொல்கிறானே! என்ன துணிச்சல். இவன் கிடக்கிறான். ஏறி உட்காருங்கள் நான் ஓட்டுகிறேன் ஓடத்தை' என்றார் இலட்சுமணர்.' தம்பி! ஆத்திரப்படாதே! என்று சொல்லி விட்டு இராமர் அந்தஓடக்காரனைப் பார்த்தார்.' அப்பா நான் ஏன் இதில்ஏறக் கூடாது என்று சொல்கிறாய்? என்று கேட்டார். ஐயா! அந்தச் சின்ன ஐயா என் மேலே கோபப்படுகிறார். அவர் வேண்டுமென்றால் ஓடத்தில் ஏறட்டும். நீங்கள் மட்டும் ஏறவேண்டாம்' என்கிறான். அதுதான், ஏன் அப்படிச் சொல்கிறாய்?' என்று கேட்கிறேன்! என்றார் இராமர். ஐயா நீங்கள் யார்? என்று கேட்கிறான் அவன். 'இந்த நாட்டுக்கு ராஜாயார் என்று தெரியுமா உனக்கு' என்கிறார். 'நல்லாகத் தெரியுமே! தசரதச் சக்கரவர்த்தியல்லவா' என்கிறான்.

'அந்த தசரத இராஜகுமாரன் தான் நான். இது என் தம்பி' என்கிறார். உடனே, அவர்களின்கால்களில்விழுந்து வணக்குகிறான் ஓடக்காரன். 'இதைமுன்னரே சொல்லியிருக்கக்கூடாதா? அது தெரியாமல் நீங்கள் யாரென்றுகேட்டுவிட்டேன். உங்களுக்கு கோடி நமஸ்காரம். இருந்தாலும் தங்களுடைய பாதத்தை மட்டும் ஓடத்தில் வைக்க வேண்டாம்' என்று சொல்லி விட்டான். அந்த ஒருவிஷயத்தில் மட்டும் பிடிவாதமாக அவன் இருக்கிறான். இராமர் முகத்திலே புன்னகை. அதுசரியப்பா! நான் உன்னுடைய ஓடத்தில் ஏறினால் உனக்கு என்ன குறை உண்டாகும்?' என்று கேட்கிறார்.

அந்த ஓடக் காரன் இப்போது தான் மெதுவாகச் சொல்ல ஆரம்பிக்கிறான். ''ஐயா! நீங்கள் வருகிற வழியில் ஒரு கல் இருந்தது. நான் கூடச் சின்னப்பிள்ளையாக இருந்த போது அந்தக் கல்லில் ஏறி, சறுக்கு விளையாட்டு விளையாடியதுண்டு, நீங்கள் அந்தக் கல்லிலே காலை வைத்தவுடனே அந்தக் கல்லு பெண்ணாகி விட்டது. இந்த ஓடத்திலும் கல்லு, மரம், இரும்பு ஆகியவை இருக்கின்றன. இதிலே நீங்கள் காலை வைத்தவுடனே இந்த ஓடமும் பெண்ணாகி விட்டதென்றால் நான் என் செய்வேன்? இந்த 'ஓடத்தை வைத்துத் தானே நான் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறேன்'' என்றான். இராமர் சிரித்தார். ''சரி நாங்கள் அடுத்த கரைக்குப் போவதற்கு ஒரு வழி சொல்லு!'' என்கின்றார்.

''வேறு ஒன்றுமில்லை. இந்த நதி நீரில் உங்கள் காலைக் கழுவி விடுங்கள். உங்கள் காலில் இருக்கிற கல்லைப் பெண்ணாக்குகின்ற அந்த மருந்து கரைந்து விடும். அதன் பின்னர் எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை'' என்றான். சரி என்று நதியில் இறங்கினார். ''ஐயா! காலைக் காலால் தேய்த்துக் கழுவக் கூடாது என்பது உங்களுக்குத் தெரியும். அதனால் அந்த வேலையை என்னிடம் விடுங்கள். நான் உங்கள் காலை என் கையால் நன்றாகத் தேய்த்துக் கழுவி விடுகிறேன் என்றான்.

சரி! என்றார் இராமர். செப்புத் தாம்பாளத்திலே இராமர் நிற்கிறார். இவன் நதி நீரை எடுத்து அபிஷேகம் பண்ணுகிறான். ''இராமா! உன்னுடைய பாத பூசைக்கு பெரிய பெரிய முனிவர்களெல்லாம் பலகாலம் தவம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தவமே செய்யாத இந்த ஏழை மீனவனுக்கு அந்தப் பாக்கியம் முதலில் கிடைத்திருக்கிறதே'' என்று சொல்லி ஆனந்தக் கண்ணீர் விட்டான். ''பாத பூசை பண்ணுவ தற்காகத்தான், இவன் என்னை ஓடத்தில் ஏற்றமறுத்தான். இவன் பரமபக்தன், என்று தம்பியிடம் சொல்கிறார் இராமர். அதன் பின்னர் எல்லோரும் ஓடத்திலேறி அக்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். ஓடத்தை விட்டு இறங்கியதுடன் இராமர் தன் விரலில் இருந்த நவரத்தின மோதிரத்தை அவனிடம் கொடுக்க வந்தார்.

ஐயா நான் சின்ன ஓடக்காரன், நீங்கள் பெரிய ஓடக்காரன், ஒரு தொழிலாளியிடமிருந்து இன்னொரு தொழிலாளிஇனாம் வாங்கக் கூடாது என்றான் அந்த ஆள். ''அண்ணன் ஓடக்காரனா? என்று கோபப்பட்டார் இலட்சுமணர், 'ஆமாம் நான் இந்தச் சின்ன ஆற்றில் உங்களை கரைசேர்க்கிற ஓடக்காரன், ஆனால் நீங்கள் பிறவி என்கிற பெருங்கடலில் தத்தளிக்கிற ஆன்மாக்களை முக்தி என்கிற கரையிலே சேர்க்கிறபெரிய ஓடக் காரன்; இப்போது உங்களைக் கரை சேர்த்ததுக்கு நான்பரிசுவாங்கினால், பின்னர் என்னைக் கரைசேர்க்கிறபோது நான் பரிசு கொடுக்க வேண்டாமா? இப்போது நான் இனாமாகத்

(4-ம் பக்கம் பார்க்க)

# எட்டாக் கனியான நட்ட ஈடு

# விண்ணப்பித்தோர் காத்திருப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வீடுகள் சேதமடைந்தமக்கான நட்ட ஈட்டுக்கு கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் விண்ணப்பித்தவர்களுள் ஒரு சிலருக்கு மட்டுமே நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தது முதல் வீடுகள்சேதம், உடைமைகள் சேதம்போன்றவற்றுக்கு நஷ்டஈடு செலுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இதன்காரணமாக நஷ்டஈட்டுக்கு விண்ணப்பித்தவர்கள் எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படாத நிலையில் இருந்துவருகின்றனர்.

இதேவேளை, கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் நஷ்ட ஈட்டுக்காக விண்ணப்பித்த சுமார் 25ஆயிரம்பேரது விண்ணப்பங்கள் எத்தகையகவனிப்பும் இல்லாத நிலையில் புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் அலுவலகத்தில் இருந்து வருகின்றதாக அறியப்படுகின்றது.

இதுஇவ்விதமிருக்கநஷ்டஈடு கோரி விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பங்களைப் பெரும்சிரமங்களுக்கு மத்தியில் பூர்த்திசெய்து, உதவும் ஆவணங்களையும் இணைத்துச் சமர்ப்பிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்ற நல்லூர் உற்சவ காலத்தை ஒட்டிய தெய்வீக இசையரங்கில் ஆறாம் நாளான இன்று. வி. வடிவாம்பிகையின் பாட்டுக் கச்சேரி பக்கவாத்தியங்கள் சகிதம் இடம்பெறவுள்ளது. (உ)

## தெய்வீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தில் வடபிரதேச இந்துப்பேரவை, 63 நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தி வரும் தெய்வீக நிகழ்ச்சிகளில் இன்று. சைவப்புலவர் கந்த சத்தியதாசன், ''சைவர்கள் சிந்திக்க வேண்டியவை'' என்ற பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ)

## பிருந்தாவனப் பிரவேஷ விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள பிருந்தாவன பிரவேஷ விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி. ப. 3. 00 மணிக்கு நல்லை குருமஹா சன்னிதான கொடியேற்றலுடன் ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது. (உ-3)

## சிறு குழு அமைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் வறியவர்களை ஒன்றிணைத்து 5பேர் கொண்ட சிறு குழு அமைக்கப்பட்டு வருகின்றன.

வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முகமாக அவர்களிடையே குழுச் சேமிப்பைத் தோற்றுவித்து தேவையான கடன் வசதிகளும் வழங்கப்படவுள்ளன. (உ-75)

## புதிய நிர்வாக சபை

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் விவசாயிகள் சம்மேளனப் பொதுக்கூட்டம் அண்மையில் இடம் பெற்றபோது பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் -க.சற்குணம், உபதலைவர்-சோ. துரைராசன், செயலாளர் வி. அகிலன், உப செயலாளர்- க.ஜெகன் மோகன், பொருளாளர்- செ. மனோகரன் மற்றும் இரு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-75)

# ஜனாதிபதி நேற்று லண்டன் பயணமானார்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற் கொண்டு நேற்று அதிகாலை லண்டன் பயணமானார்.

இதேவேளை இன்றைய இலங்கையின் அரசியல் நிலைபரம் புலிகள் மீதான தடை நீக்கம் ஆகியனகுறித்து அங்கு கலந்தாலோசனை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-8)

# பொல்கொட ஆற்றில்இருந்து நான்கு வர்த்தகர்களின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

பாணந்துறை பொல்கொட ஆற்றிலிருந்து 4 வர்த்தகர்களின் சடலங்கள் நேற்றுமுன் தினம் இரவுபொலிஸாரினால் மீட்கப்பட்டன.

பாணந்துறை மாலமுல்ல பகுதியில் நண்பர் ஒருவரின் விருந்து உபசாரத்தில் கலந்து கொள்ளச் சென்றவர்களே இவ்வாறு பொலிஸாரினால் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்துபாணந்துறை பொலிஸார் தீவிரவிசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (உ-8)

பாடசாலை மாணவர்களிடையே

# விஞ்ஞானக் கண்காட்சி போட்டி செப்ரெம்பரில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தும் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையான 5வது கண்காட்சிப்போட்டி செப்ரெம்பர் மாதம் 11, 12, 13 ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்குரிய சுற்றறிக்கை வடமாகாண சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கலாநிதி நாகலிங்கம்சிவயோகன், கண்காட்சிப் பொறுப்பாளர் ஜே. எஸ். ஏ. பௌதிகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வகுப்பு2 தரம் 1 இற்கு பதவி உயர்வு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர். அரசாங்கசேவை ஆணைக் குழு, வின் கல்விச் சேவைக் குழுபத்தர முல்லை என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். (உ-3)

# முதியோர் நலன் பேணும் மன்றம் அங்குரார்ப்பணம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் கிராமத்தில் ''முதியோர் நலன்பேணும்மன்றம்'' கடந்த புதன்கிழமை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் மேற்படி புளியங்கூடல் முதியோர் நலன்பேணும் மன்றம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டது.

அமைப்பின் தலைவராக சி.கணபதிப்பிள்ளையும் 5 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (உ-75)

# மானிப்பாய் பகுதிகளில் நீரின் தன்மை மாறுகிறது

## யு.என்-எச்.சி.ஆர் மாற்று ஏற்பாடு

(தென்மராட்சி)

மானிப்பாய், கட்டுடை பகுதிகளிலுள்ள குடிநீர் கிணறுகளில் நீரின்தன்மைமாறிவருவதன் காரணமாக சுமார் 300 குடும்பங்கள் குடிநீர் பெறுவதற்கான வாய்ப்புக்களை இழந்து வருகின்றன,

இதனை உணர்ந்து யு.என். எச்.சி.ஆர் நிறுவனம் இப்பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்குவேறு இடங்களில் இருந்து குடிநீரைப் பெற்று விநியோகம் செய்து வருகின்றது.

இது போன்ற நிலைமை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும் நிலவிவருவதாகவும் எனினும் குடிநீரை வழங்குவதற்கான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லைஎனவும் தெரிய வருகின்றது. (உ-77)

# நீரினால் பரவும் நோய்களால் உலகில் வருடாந்தம் 2.5மில்லியன் பேர் இறப்பு

(லண்டன்)

உலகளாவிய ரீதியில் 2.5 மில்லியன் மக்கள் நீரினால் பரவி வரும் நோய்களினால் வருடாந்தம் மரணமடைந்து வருகிறார்கள் என உலகசுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்நோய்களின் தாக்கங்களினால் உயிரிழப்பவர்களில் கூடுதலானோர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பீடுகளின் படி, 2020 ஆண்டில் நீரினால் பரவி வரும் நோய்களின் தாக்கத்தினால் இறப்போர் தொகை 76மில்லியன் ஆக உயரும் என அறியப்பட்டுள்ளது.

இத்தகைய நோய்கள் பரவி வருவதை தடுக்கும் முயற்சிகளில் ஒவ்வொரு நாட்டு சுகாதார அமைச்சுக்களும் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் எனவும் உலக சுகாதார நிறுவனம் கேட்டுள்ளது. (உ-8)

# ஆயுத விற்பனையில் அமெரிக்கா முன்னணி கொள்வனவில் ஐ. அரபு எமிரேற் முதலிடம்

(வாஷிங்டன்)

கடந்த வருடம் ஆயுத விற்பனைகளில் அமெரிக்கா முன்னணி வகித்திருப்பதாக உளவு செய்மதி தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, கடந்த வருடம் மாத்திரம் ரஷ்யாவுடன் ஆயிரத்து 200 கோடி டொலர்கள் பெறுமதியுடைய ஆயுத விற்பனை தொடர்பான உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்தியா சீனா ஆகிய ஆசிய நாடுகளுடன் 580 கோடி டொலர்கள் பெறுமதியான ஆயுத விற்பனை ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரமன்றி, 1998 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளையும் நோக்குமிடத்து அமெரிக்காவிலிருந்து அதிக ஆயுதங்களை இறக்குமதி செய்த வளர்முக நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும் உளவு செய்மதி தகவல் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய அரசு எமிரேற் 10 ஆயிரத்து 80 கோடி டொலர் பெறுமதியான ஆயுதங்களை கடந்தஆண்டு அமெரிக்காவிடம் கொள்வனவு செய்து முதலாவது இடத்தில் உள்ளது.

ஆனாலும் 2001 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஆயுத விற்பனைகளில் 34 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, அமெரிக்க வர்த்தக மையம் மற்றும் பாதுகாப்புத் தலைமையகம் ஆகியவற்றின் மீது கடந்த ஆண்டில் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றதும், அமெரிக்காவிடம் கொள்வனவு செய்யப்பட்ட யுத்த தளபாடங்களே இவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் அப்போது கருத்து தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சுயதொழில் முயற்சிக் கடன்

(ஆனைக்கோட்டை)

சாவல் கட்டுஜே 131கிராம அலுவலர் பிரிவில கணவனை இழந்த பெண்களுக்கு கியூடெக் நிறுவனம் சுயதொழில முயற்சிக் கடனை அண்மையில் வழங்கியுள்ளது.

15 பெண்கள் 5 ஆயிரம் ரூபாப்படி இக் கடனைப்பெற்றுள்ளனர். (உ-201)

## ஞாபகார்த்த விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமயப் பேரவை முன்னாள் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் 7 ஆவது ஆண்டு ஞாபகார்த்த விழா எதிர்வரும 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஏழாலையில் அமைந்துள்ள கைதடி சைவச் சிறுவர் இல்லத்திலும், 22ஆம் திகதி வியாழக்கிழமை ஆத்மஜோதி மணிமண்டபத்தில் ஞாபகார்த்த சபையால் நடத்தப்படவுள்ளது. (உ)

## கப்பல் நடமாட்டம் குறித்த தகவல்களைக் கண்டறிய அமெரிக்கா விருப்பம்

(வாஷிங்டன்)

கடலோர நாடுகளின் கடல் பகுதியில் இடம் பெறும் சப்பல் நடமாட்டம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதிகளின் கடல் நடமாட்டத்தை கண்டறியவே இத் தகவல்களைப் பெற விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## பலஸ்தீன ஜனாதிபதித் தேர்தலில் பல்கலை விரிவுரையாளரும் போட்டி

(காஸா)

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள பலஸ்தீன ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக பல்கலைக்கழக ஆய்வாளரான ஹிஸாம் நப்ஸல் அறிவித்துள்ளார்.

தான் ஜனாதிபதியாக தெரிவானால் பலஸ்தீன அதிகார சபையை கலைத்து விடுவதாகவும், பலஸ்தீனத்தை ஒரு குடியரசாக பிரகடனப்படுத்த இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யஸிர் அரபாத்தை 'அனைத்து பலஸ்தீனர்களினதும் தந்தை' எனவும் அவர் விமர்சித்துள்ளார். (உ-3)

## புராதன நாணயங்கள் ஒரிஸாவில் கண்டுபிடிப்பு

(புதுடில்லி)

கி.மு600 இற்கும் கி.பி 600 இற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் புழக்கத்தில் இருந்ததுஎனக் கருதப்படும் சில வெள்ளிநாணயங்களை ஒரிஸா மாநிலத்தில் மல்பானா என்னும் இடத்தில் தொல்பொருள் ஆய்வாளர்கள்கண்டுபிடித்துள்ளனர்.

இவ் வெள்ளி நாணயங்களில் மரம், நதி, சூரியன், குன்றுகள் போன்ற சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளதாகவும்,

பௌத்த மதத்துடன் தொடர்புடைய தகவல் அறிந்துகொள்ள இவைவாய்ப்பாகஇருக்கும் எனவும்ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ-8)

## நூலக ஆலோசனைக் குழு அங்கத்தவர் தெரிவு

(சுதுமலை)

வலிகாமம் தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேசசபைக்குட்பட்ட மானிப்பாய் பட்டிபனசபை நூல் நிலையம், ஆனைக்கோட்டை உப அலுவலகநூல் நிலையம், மற்றும் பண்டத்தரிப்புநகரசபை நூல் நிலையம், மாதகல் கிராம உப அலுவலகநூல்நிலையம்ஆகியவற்றின் நூலக ஆலோசனைக் குழு மற்றும் வாசகர்வட்டம் ஆகியவற்றின் குழுத்தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

இவ்ஒவ்வொரு நூலகஆலோசனைக் குழுவிலும் 9 பேர் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களின் விபரம் யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபார்சுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்நூலக ஆலோசனைக் குழுத்தெரிவின்போது அவ்வவ் நூலகங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர்களான இளைப்பாறிய அதிபர், ஆசிரியர்கள் சமாதானநீதிவான்கள்மற்றும் சமூக ஈடுபாடுள்ள இளைஞர் யுவதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (உ252)

# சாரணர் குழு மூலம் சமாதான முன்னெடுப்புக்கான அழைப்பு

(ஈச்சமோட்டை)

அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து மோட்டார் சைக்கிள் பவனிமூலம் தென்பகுதிக்கு ஜம்போரி சென்ற சாரணர் குழு மூலம் சமாதானத்தை வலியுறுத்திய மகஜர் ஒன்றுகத்தோலிக்க கலைஇலக்கிய வட்டத்தினரால் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அம்மகஜரில்,

அரசு-புலிகளின்புரிந்துணர்வு சமாதான முன்னெடுப்புக்கள் தொடர் பணியாக சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

தனிப்பட்ட அரசியல்குரோதங்களால் மக்களின் அமைதி வாழ்க்கை குலையாமல் பாதுகாக்கப்படல் வேண்டும்.

அடிமட்டமக்களிடத்தில்ஏற்பட்டுள்ள சமாதான சிந்தனை வலுப்பெற்றுவருவதைவளர்த்தெடுப்பதில் ஒவ்வொரு அரசியல்-மத- சமூகத் தலைவர்கள் முன்நின்று உழைக்க வேண்டும்.

சமாதான பயணங்கள் ஏ-9 பாதையூடாக வருவோரிடத்தில் கண்காட்சி, வியாபார, சுற்றுலா, பொழுது போக்குகளாக இராதுசமாதானத்தின் நோக்கம் வலுப்பெறும்செயல்களில் சிறிதளவேனும் பங்கேற்க முயல வேண்டும்.

சமாதானப் பயணங்கள் வியாபார நோக்காக, நயினாதீவு, விகாரை தரிசிப்பு, நூல் நிலையமுன்றலில்படம் எடுப்பு கீரிமலை, காங்கேசன்துறை சென்று வருதலுடன் அரச- அரசசார்பற்ற தனியாரின் சமாதானப் பயணங்களாக முடங்கிவிடுகின்றது.

இவை மக்கள் தரிசிப்பு கலந்துரையாடல்களாக துன்ப துயரப்பகிர்வுகளாகமாற்றம்பெற வேண்டும்.சமாதான பயணங்கள் அர்த்த மூட்ட வேண்டும்.

முறிந்த பனை, தென்னைகள், வீட்டுச் சிதைவுகள்பார்த்துப் பரிதாபப்படுவதால் மட்டும்பனை தென்னைக்கு தலை முளைத்து விடாது. சிதைந்த இல்லங்கள் நிமிர்ந்துவிடாது, துயருறும் மக்களின் துயர் தீர்ந்து விடாது.

ஆக்கபூர்வமானசெயல்களில் ஈடுபடசமாதான விரும்பிகளாலும் அரச- அரசசார்பற்றநிறுவனங்களாலும் நல்லின விதைகளை மீள்நடுகை மூலம் சிறு சிரமதானப் பணிகளில் ஒன்றிணைந்து புனர் வாழ்வில் பங்கேற்கும் செயல்களைச் செய்தல் ஊடாக சமாதானத்தின் அடையாளங்களைவளர்க்கலாம்.

இவைபற்றியதிட்டமிடலும் வழிகாட்டலும் பொறுப்பு வாய்ந்தவர்களால் நெறிப்படுத்தி அழிவைச் சொல்லி ஆறுதல் அடையாது- ஆக்கத்தில் பங்கேற்கும் சமாதான முன்னெடுப்பாக்கலாம்.

சமூக சீர்கேடுகள் மலிந்து வளர்கிறது. இவை பற்றிய கூடிய கவனம் எடுத்தல் மிக அவசியமாகிறது. இவை களைதலுக்கு முன்னுரிமைகொடுத்தல் முக்கியமானது. கட்சி, இனம்பாராது சீர்திருத்த வேண்டும். மதுபோதை பாவனை, வன்முறை அட்டகாசங்கள், வழிப்பறி, களவு, சுரண்டல், வீதிச்சேட்டை போன்றவை) மேலும் சமூக சீர்கேடுகள் பெருகக் காரணமாகிறது.

ஆன்மீக பற்றுறுதியும், நல்நெறி வழிகாட்டலும் பொழுதுபோக்குமையங்களும் உள ஆற்றுப்படுத்தல் வழிகளையும் மேம்படுத்துவதில் பொது நிறுவன சுரண்டல்கள் இன்றி மக்களிற்கு வழங்கும் மக்கள் மயமான செயற்திட்டங்களை தீட்டி வழிகாண்பதாலும் தனி மனித, குடும்ப, சமூக சமாதான வழிகளை வளர்த்தெடுப்பதில் ஒன்றிணைந்த செயற்திட்டம் மிகவும் பயனுள்ளதாய் அமையும்.

இவ்வரிய பணிகளில் ஒன்றிணைந்துசெயலாற்றவேண்டுகிறோம். இதுவே எமது சமாதானத்தின் தேவையும்ஆவலுமாகும். ''இருளைப் பழிப்பதைவிட ஒளி ஏற்றுவதே மேல்'' (உ-59)

## மருந்தகங்களை பரிசோதனை செய்ய விசேட குழுக்கள்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் உள்ள மருந்தகங்கள் மற்றும் மருந்தக விற்பனை நிலையங்களை பரிசோதனை செய்வதற்கான விசேட குழுக்கள் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பிரிவுகளில் விரைவில் அமைக்கப்படவுள்ளன.

சுகாதார வைத்திய அதிகாரிகளைத் தலைமையாகக் கொண்டு ஒவ்வொருசுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் அமைக்கப்படவுள்ள இக் குழுக்கள் அவ்வப் பிரதேசங்களில் உள்ள மருந்தகங்கள், மருந்து விற்பனை நிலையங்களை அடிக்கடி பரிசோதனை செய்து மருந்துச் சட்டத்திற்கு அமைய நடவடிக்கைகளையும் எடுக்கவுள்ளன.

யாழ். நகரப் பகுதியில் அதிகளவு மருந்தகங்கள், மருந்து விற்பனை நிலையங்கள் அமைந்திருப்பதால் இவற்றை பரிசோதனை செய்வதற்கான யாழ்மாநகரசபையின் சுகாதார அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரினால் அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-252)

## நியாப் திட்டத்தின் கீழ் வடமராட்சிப் பகுதியில் 10குளங்கள் புனரமைப்பு

(மந்திகை)

உலக வங்கியின் நிதியுதவியுடன் நியாப் திட்டத்தின்கீழ் வடமராட்சிப்பிரதேசத்தில்10 விவசாயக் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச செயலர் பிரிவில் 7 குளங்களும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இரு குளங்களும், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஒரு குளமும் இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

அத்துடன் நியாப் திட்டத்தின் கீழ் யாழ்.குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களை பார்வையிடுவதுடன் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராயும் பொருட்டுவவுனியாமாவட்ட நீர்ப்பாசன திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் சிவகுமார் தலைமையில் அதிகாரிகள் குழுஇங்குவருகை தந்துள்ளது.

இவர்கள்பிரதேச செயலர், கிராம சேவையாளர்கள் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்து மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர். (உ-23)

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கணி
குறள்

# வலம்புரி

## வியாதி மாறவில்லை

அரசு- புலிகள் சமாதானப் பேச்சுக்கான முன் முயற்சிகள் நடைபெற்று வருகின்றது. அதன் முக்கிய கட்டமாக அமைச்சர் மெலிந்த மொறகொடவும் புலிகளின் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கமும் நோர்வேயில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். இப்பேச்சு வார்த்தைகளின்போது தாய்லாந்தில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் பத்து நாள் முன்னதாக விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படுமென இணக்கப்பாடுகாணப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தடை நீக்கத்திற்கு தடையாக இருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், புலிகளின் தடை நீக்கத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளார். இச்சம்மதத்தை வெளியுறவு அமைச்சர் டிரோன்பெர்னாண்டோ இந்தியா சென்ற போது அங்குவைத்து அதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் சம்மதம் வெளியுறவு அமைச்சரினால் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அரசு-புலிகள் பேச்சு சாத்தியமாகுமென்ற நம்பிக்கை பொதுமக்கள் தரப்பில் ஏற்படலாயிற்று. இதற்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைச்சர் மெலிந்த-ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் ஆகியோரின் சந்திப்பும் அமைந்திருந்தது.

நிலைமை இவ்வாறு இருக்கும் போது, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர மீண்டும் தனது வாத்தியத்தைமீட்கத்தொடங்கியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கூடாதென்பதே அவரின் வாசிப்பு. புலிகள் மீதான தடை நீக்கத்திற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்துள்ளாரென வெளியுறவு அமைச்சர் அண்டை நாட்டில் தெரிவித்திருக்கும் போது ஜனாதிபதி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றஉறுப்பினர் மங்கள சமரவீர புலிகள் மீதான தடையை நீக்கக் கூடாதெனக் கோரியிருக்கிறாரெனில் வியாதி இன்னமும் மாறவில்லை என்பதே பொருளாகும்.

# அமைதியுடன் கூடிய சமாதான வாழ்வினையே இறைவன் எம்மிடத்தில் எதிர்பார்க்கின்றார்



## பரமபிதா காட்டிய பாதை

ஜோ. ஜெஸ்ரின்

சமாதானத்தை எல்லோரும் எதிர்பார்க்கின்றோம். கிடைக்குமா? என ஏங்குகின்றோம், தவிக்கின்றோம். இறுதியில் ஏமாற்றங்களையே காண்கின்றோம்: அனுபவிக்கின்றோம்.

நாம் சமாதானத்தை மற்றவர்களுடன் பகிராமல் கறைபடிந்த உள்ளங்களுடன் துன்புறுத்தல்கள், பழிவாங்கல்கள், போட்டி, பொறாமைகளால் மன்னிக்க முடியாத மனங்களை பிரசவித்துவிட்டு சமாதானம் பற்றிப் பேசுகின்றோம், கண்களை மூடிக்கொண்டு விடிவைத் தேடுகின்றோம்.

அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர். (மத்தேயு-5:9) கடவுளின் மக்களாக வாழ்வதற்கு காணிக்கைகள் மற்றும் பலிப் பொருட்கள் முக்கியமல்ல, உன் பகைவனை நீ மன்னித்து மனதினில் அமைதியை உண்டாக்குவதால் இறைவன் உனக்குள் உதயமாவார், மிகுந்த மகிழ்ச்சியும அடைவார். அப்போது தான் சமாதானம துளிர் விடத் தொடங்குகின்றது.

சாந்தியும், சகோதரத்துவமும்

குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் என்று யேசு கூறியிருக்கின்றாறா. ஏனெனில குழந்தைகளிடம் கள்ளமற்ற உள்ளமுண்டு என்பதால், நாமும் குழந்தை உள்ளம் படைத்தவர்களாக வாழ வேண்டும்!. அலகையின சோதனைக்கு உட்படுபவர்ரும்.

இன்று போர் அனர்த்தங்களால் நொந்துபோன நெஞ்சங்களில் சமாதானம் கிடைக்குமா? யுத்தம் தொடருமா? என்ற எதிர்பார்ப்பும், ஏக்கங்களும கலந்து; சாந்தியிழந்து நிற்கின்றார்கள். இவற்றிற்கெல்லாம் அடிப்படைக காரணம்யாதெனில் யுத்தம் புரிபவர்களும் ரத்தம் சிந்துபவர்களும் தத்தம் மதங்களின் நெறிமுறைகளை அறவே மறந்து வாழ்ந்து கொண்டிருப்பதுதான். இன்று களே பாவத்தின் பிடிக்குள் சிக்குகின்றார்கள். கொலை, கொள்ளை, விபச்சாரம் போன்ற நாற்றச் சேற்றுக்குள் புதைந்து அழுக்குடன் வாழ்வதை ஏற்றுக்கொள்ளாமல், நற்பண்புகளுடன் சிறந்து விளங்க வேண்டும். இறைசக்தி வலிமை மிகுந்தது. எனவே, இறை பயம், இறை பக்தியுடன் வாழ்கின்ற பொழுதுதான் அமைதி, சாந்தி, சகோதரத்துவம் மல தாங்கமுடியாத சுமைகளுடனும், தவிர்க்க முடியாத சோகங்களுடனும் ஆக்க வழிகளை மறந்து வாழ்கின்றார்கள் இறைபுகழை வெறுத்தவர்களாய் அழிவுப் பாதையில் கால்களை வைத்துக்கதறுகின்றார்கள்.

அன்பும் சமாதானமும்

இறைவனின்மறை உண்மைகளை அறிய விரும்பாமல், மனிதத்தின் புனிதத்தை உணரமுடியாமல் நல்ல மனிதனாக வாழமுடியாது ஏன் போகின்றது? விசுவாசம் அற்றுப் போய் பாவங்களும், அக்கிரமங்களும் நிறைந்த உலகினிலே நாம் எமக்குள்ளேயே சமாதானமில்லாமல் சமாதானத்தைத் தேடுகிறோம். அன்பை வாழ்ந்துகாட்டுவதன் மூலம் புதிய மனதினைமலரச் செய்து. அன்பு எனும் கனியை இறைவனுக்கு காணிக்கையாக்குவோம். உள்ளங்களில் சமாதானத்தை உருவாக்கி உலக சமாதானத்திற்காக வேண்டுவோம்.

எமக்கு எது தேவையோ அதை மற்றவர்களிற்கும் கொடுப்பதன் மூலம், நாமும் பெற்றுக் கொள்ள முடியும். மன்னித்துமன்னிப்பைப் பெறுவோம். அன்பை கொடுத்து அன்பைப் பெறுவோம்சமாதானத்தைகொடுத்துசமாதானத்தைப் பெறுவோம் ஏனெனில் அன்பே கடவுள். அன்பின் நிமிர்த்தமே இவ்வுலகுபடைக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஆன்மீக வழியினில் அன்புடன் அகிலத்தை அமைதி பெறச் செய்வதற்கு முயல்வோம். அப்போது தான் இல்லங்களிலும், உள்ளங்களிலும் மட்டுமல்ல நாட்டினிலும் சமாதானம்மலரும் என்பதுஉறுதி.

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்!

## சோதிட பலன்

ஆர். ஐ. துரைமுருகர்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**உடல் எண் 1 உயிர் எண் 5**

1, 10, 19, 28 போன்ற தேதியில் பிறந்த இவர்களது தேதி, மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 5 வருமேயானால் சூரியன், புதன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். எப்பொழுதும் சுறு சுறுப்பாக விளங்கும் இவர்கள், ஓரிடத்தில் இருக்க மாட்டார்கள், அதோடு யாரும் இவர்களை என்ன செய்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளமுடியாது. சுமாரான உயரமும், சிறிது பருமனாகவும்இருக்கும் இவர்கள் எதையும் சீக்கிரம்முடிக்க வேண்டும்என்றுஎண்ணுவர். அந்தக்காரியம் முடியுமவரை உணவைக்கூடப் பொருட்படுத்தாது ஓடியாடி உழைப்பார்கள். சுத்தமான ஆடையைக்கூட அணியமாட்டார்கள் திடீரென்றுவிலையுயர்ந்த பளபளப்பான ஆடை ஆபரணங்களோடு கவர்ச்சியாகத் தோற்றமளிப்பர். எனவே, அவர்களைப்பார்த்தவுடன் நினைத்ததை முடித்துவிட்டார்என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

இப்படிப்பட்ட குணம் கொண்ட இவர்கள் தனியாகப் போகும்போது தானே பேசிக்கொண்டு செல்வர். சிலர் கற்பனைசெய்து தனக்குள்ளே மகிழ்வர். யாருக்கும் அடிபணிந்துபோக மனம் கூசும், இவர்கள் உண்மையான அன்பும், திறமையும் உள்ளமனிதர்களை மதிப்பதுடன் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச்செய்ய முன்வருவர். இவர்களையாரும்பகைத்துக் கொண்டுகெடுதல் விளைவித்தால் உடனே அசுரனாக மாறிவிடுவர். எப்படியும் நமது எதிரியை சின்னாபின்னப்படுத்த வேண்டும் என்று திட்டம் தீட்டிய வண்ணம் இருப்பர். ஆனால் சிறிதுநாட்கள் சென்றுஅதேஎதிரி நேரில் வந்து மன்னிப்புக்கேட்டால் முடிந்தவரைஉதவி செய்வர்.

**புரியாத புதிர்**

பயணம் செய்யுமிடத்தை யாரிடமும்சொல்லமாட்டார்கள். அப்படிச் சொன்னால் இடத்தைமாற்றிச் சொல்லிவிட்டுச் செல்வர். நண்பர்களுக்கு ஒருபுதிராகத் தோன்றும் இவர்கள் ஒரு காரியத்தைச் செய்யவும், அழிக்கவும் சக்தி வாய்ந்தவர்களாவர். எப்பொழுதும் பத்து நபர்கள் உடனிருப்பர். திடீரென்று எல்லோரையும் விட்டுவிட்டுத் தனியாகச் செல்லுவார். பலரை வாழ வைக்கும் இவர்கள் சிலருக்கு இடைஞ்சலாகவும் இருப்பர்.

நிலையில்லாத காதல்மனம் கொண்டவர்கள். ஆண்டவனை வழிபடுவதிலும் சிறிது வேடிக்கையாக இருக்கும். தான் தொடுத்தகாரியம் முடியாவிட்டால் கடவுளை வெறுப்பர். உத்தியோகம் பார்ப்பவராக இருந்தாலும் சதா இவர்கள் மனம் தொழில் மூலம் அதிகம் சம்பாதிக்க வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டிருக்கும் இவர்கள் பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாகப் பெயரை அமைத்துக் கொண்டால், எண்ணுகின்ற எண்ணங்கள் வெற்றிபெறும். இந்த ஆதிக்கத்திலுள்ள அநேகருக்கு 41 வயதிற்குள் பல தொழில்கள் நடந்துகொண்டிருப்பதை நானறிவேன்.

குடும்பத்தாருடைய ஒத்துழைப்பால் உயராது தனது சொந்த முயற்சியால், புகழும், செல்வமும் சம்பாதிக்கவேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொண்டிருப்பர், இவரது பிறந்த எண்களுக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமைந்து விட்டால், உயர்தரமான வாழ்க்கையை அடைவர் என்பது உறுதி. அரசியலிலும் ஓரளவு ஈடுபாடு இருக்கும். நிரந்தரமான அரசியல் வாதியாக இருக்க மாட்டார். பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்கள் யோகம் மிகுந்தவர்களே.

**தொழில்**

இவர்களுக்கு கமிஷன் ஏஜென்சீஸ், காண்ட் ராட்,

(3 ஆம் பாக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### விதை

உங்கள் அறிவைப்பற்றி வீணாகப்பெருமை கொள்ளாதீர்கள். பணிவாக நடந்து கொள்ளுங்கள் பிரம்ம வித்தையைக் கற்றுக்கொள்ளுங்கள். கடவுள் பற்றிய அறிவைக் கற்றுக்கொள்ளுங்கள். இந்த விஞ்ஞானத்தை அடக்கம் உடையவர்களால் தான் கற்றுக் கொள்ள முடியும். தீய நூல்களைப் படிப்பது உட்பட எல்லா மயக்கங்களிலிருந்தும் நீங்கள் விடுபட வேண்டும். நீங்கள் கற்றது கைமண் அளவு, கற்க வேண்டியது உலகளவு. பிரம்ம வித்தை ஒன்றே உங்களுக்கு அழியா நிலையைத் தர முடியும். அதுதான் உங்களுக்கு ஆற்றலை அளிக்கக் கூடியது. அதற்கான விதையை இப்போதே உங்கள் உள்ளத்தில் விதையுங்கள்.

சுவாமி சிவானந்தர்

# நோர்வே- தாய்லாந்து அரசுகளே பேச்சுக்கான திகதியை நிர்ணயிக்கும்

**சமாதான செயலக பணிப்பாளர் பேணாட் குணதிலக தெரிப்பு**

(கொழும்பு)

நோர்வே அரசாங்கத்துக்கும் தாய்லாந்து அரசாங்கத்துக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளை அடுத்தே இலங்கைஅரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைக்கான திகதி தீர்மானிக்கப்படுமென சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் பேணாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன்பாலசிங்கம் மற்றும் நோர்வே அரசதரப்பு பிரதிநிதிகள் ஆகியோருடன் நோர்வேயில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு நேற்றுக்காலை நாடு திரும்பிய குணதிலக இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;-

நோர்வேயில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது, செப்ரெம்பர் இரண்டாம் வாரத்தில் பேச்சுவார்த்தையினை ஆரம்பிப்பது என்றும், எனினும் பேச்சுக்கான திகதி

**பேச்சுக்கான**

சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னகர்த்தும் செயற்பாட்டின் அடிப்படையிலேயே இச்சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும், இதன்போது உறுதியான பலமுடிவுகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தலைமையில் வன்னிசெல்லும் இச்சமாதானக்குழு, வன்னிச்சந்திப்புக்களை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் சந்திக்கவுள்ளதாக ஒஸ்லோ தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (இ)


# இலங்கை வங்கியின்

## 297-வது கிளை

# திருநெல்வேலியில்

முற்றிலும் கணனிமயப்படுத்தப்பட்ட சேவையுடன்
ஆகஸ்ட் மாதம் 19ந் திகதி 2002ம் ஆண்டு காலை 9.00 மணிக்கு

**531. பலாலி வீதி திருநெல்வேலியில்**

சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர் திரு. J. F. G டீ சில்வா அவர்களால்
வைபவரீதியாக திறந்து வைக்கப்படும்.

**யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் திரு பொ. பாலசுந்தரம்பிள்ளை**
அவர்களும்

**யாழ். மேலதிக அரசஅதிபர் திரு து. வைத்திலிங்கம்**
அவர்களும் பிரதமவிருந்தினர்களாக கலந்து கொள்ளும் இவ்வைபவத்திற்கு எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**இலங்கை வங்கி**
உங்கள் தேவைகளை சந்திக்கும்

**திருமதி க துரைராஜா**
உதவிப்பொது முகாமையாளர்
வடபிராந்தியம்;


## சிறுவர்கள் பற்றிச் சிந்திப்போம்

சிறுவர்கள், பெரியவர்களது கருத்துக்களினைச் செவிமடுக்கின்றனரில்லை என்றே அனேகர் பொதுஇடங்களில் கூறுகின்றனர். ஆனால் அதே சிறுவர்கள் தம்மைப் பினபற்றி நடக்கின்றனர்; தம்மை ஒரு முனனுதாரணமாகக் கொண்டு வாழ முற்படுகின்றனர் எனவே நாம் சிறப்பாக வாழ்ந்து காட்டவேண்டும்என எண்ணி செயற்பட பெரியவர்களில் அனேகர் மறந்து விடுகின்றனர்.

து. இராஜேஸ்வரன்
துன்னாலை - வதுன்னாலை

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி

**மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு**
**அறை எண் 30 போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்**

தொலைபேசி - 021-2261
EXT-274

அரசு புலிகள் பேச்சுவார்த்தையின்போது

# வலிவடக்குமீள்குடியேற்றம் பற்றிஆராயுமாறுதீர்மானம்

(ஏழாலை)

அரசு- புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களைமீள குடியமர்த்துதல் மற்றும் இயல்பு நிலையை ஏற்படுத்துதல் தொடர்பாக ஆராயுமாறு கோரும் தீர்மானம் வலிவடக்கு புனர்வாழ்வு கழகத்தினால் நிறைவேற்றப் பட்டுள்ளது.

- விடுதலைப்புலிகளின்யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருடன் பேச்சுக்களை நடத்துதல்
- யாழ்மாவட்டதமிழ்க்கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி, ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுக்களை நடத்துதல்
- விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடத்துதல்

ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன இத்தீர்மானங்களை நடை முறைப்படுத்தும் பொருட்டு 12பேர்கொண்ட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் வலிவடக்கு புனர்வாழ்வுக் கழகத் தலைவர் எஸ்.பரமநாதன் செயலாளர் எஸ். சிவபாலன் வலிவடக்கு விவசாயிகள் சங்கத் தலைவர் மகேந்திரன், செயலாளர் நவரட்ணம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமகாராசா உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிகள் இதில் அடங்குகின்றனர். (த-12)

நிர்ணயிப்பை நோர்வே அரசிடம் விட்டுவிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இரு நாடுகளுக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தையின் பின்னரே அரசு- புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான இறுதித் திகதி தீர்மானிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்; (த)

## கொழும்புத்துறையில் சிப்பாயின் சடலம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை பகுதியில் உள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர்சூட்டுக்காயத்துடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சிங்க றெஜிமென்ட் 9 ம் படைப்பிரிவைச் சேர்ந்தமஹிந்தசெனவிரட்ண என்ற சிப்பாயே கொழும்புத்துறை பிள்ளையார் கோவிலடிப் பகுதியிலிருந்து நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மனவிரத்தி காரணமாக இவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. (த-19-43)

**மாவீரரகளின்**

கள் விடுதலைப் புலிகளால் கௌரவிக்கப் படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது: (இ)

**ஆலோசகர்**

நிறுத்தக்குழு, கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள். மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஆகியோருடனும் முக்கிய சந்திப்பில் ஈடுபடுவாரென்றும் அரசியல் அவதானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை லண்டனில் இருந்து வன்னி வரும் பாலசிங்கம் இலங்கை அரசின் அனுசரணையுடன் கட்டுநாயக்காவிமானநிலையத்தில் வந்திறங்கிவிமானப்படையின் விசேட ஹெலிகொப்ரரில் வன்னி செல்வார் என்றும் ஏஜென்சி செய்திகள் தகவல் வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது:

**இடைக்கால**

லான சமாதான முயற்சிகளில் பல தடங்கல்கள், தடைகள் ஏற்படலாம்

இத்தடங்கல்கள் காரணமாக சமாதான முயற்சிகள் காலதாமதமடைலாம்.

எனினும் எத்தனை தடைகள் வந்தாலும் அதனை எல்லாம் தாண்டி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்

இந்த முயற்சியில் இருந்து நான் பின்வாங்க மாட்டேன் சமாதான முயற்சிகள் தொடரும் வேளையில் ஏதாவதுபாரதூரமான சம்பவங்கள் நடைபெற்றால் அவற்றை அடக்க பாரதூரமான நடவடிக்கை எடுக்கவும் நான்பின்வாங்க மாட்டேன்

இந் நிலையில் அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் சமாதான முயற்சிகள் பூரண வெற்றியளிக்க அனைத்துமக்களும் தமது பூரண ஆதரவை அரசுக்கு வழங்கவேண்டும்.

இலங்கை நாடு சிங்களவருக்கு மட்டும் சொந்தமானது அல்ல. சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் சொந்தானது.

எனவேஒவ்வொரு இனமக்களும் கௌரமான மூறையில் தமது உரிமைசுளுடன் வாழவேண்டும்.

அடுத்த மாதம் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும்இடையில்தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை பூர்வாங்க விடயங்களை மையமாகக் கொண்டு நடத்தப்படும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, வடக்கு கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுக்கள் அடுத்த கட்டங்களில் இடம் பெறும்.

நாடு முழுவதற்கும் தலைவர் என்ற வகையில் சமாதானத்தை ஏற்படுத்த அயராது பாடுபடுவேன்.

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் உரிமைகளைப்பாதுகாக்க அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

விளம்பரத்தை எதிர்பார்க்காமல் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு கண்டு மக்களின் நண்பனாக, ஒரு தலைவனாக இருப்பதற்கே விரும்புகிறேன் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இக்கூட்டத்தில் பெருமளவான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)


8

**வாடகைக்கு**

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் சிற்றிபோய் தையலகத்திற்கு அருகில் உள்ள இரு பெரிய கடைகளும் அதற்குப் பின்னால் உள்ள ஸ்ரோர் அதனுடன் கூடிய சிறிய கடை என்பன வாடகைக்கு உண்டு.

**தொடர்பு;**
இராசையா சாவித்திரி
65, சிவன், பண்ணை, வீதி
யாழ்ப்பாணம்
(5782)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 18-08-2002இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.